# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

# 2020

## வருடாந்த அறிக்கை

# உள்ளடக்கம்


| விமர்சனம் | பக்கம் |
|---|---|
| எம்மைப்பற்றி | 02 |
| 2020 ஆம் ஆண்டு சுருக்கமாக | 05 |
| பொது முகாமையாளரின் பணிவிடை | 06 |
| பணிப்பாளர் சபை | 07 |
| சிரேஷ்ட முகாமைத்துவ குழு | 08 |
| கொவிட் 19 தொற்றுக்கு பதில் அளித்தல் | 09 |

## செயல்திறன்

**வெளிநாட்டு தொழில் கைத் தொழிலினை ஒழுங்குபடுத்தல் மற்றும் வசதிகள் அளித்தல்** 11

அனுமதிப்பத்திரம் வழங்கல் 11

தொழிற் கட்டளையினை அனுமதித்தல் மற்றும் தொழில் பதிவு செய்தல் நடைமுறை 12

சட்டத்தினை நடைமுறைப்படுத்தல் 14

வியாபார பிணக்கினை இணக்கத்திற்குட்படுத்தல் 16

**இலங்கைக்கு வெளியில் கடமையில் உள்ளவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பினை பாதுகாத்தல்** 16

முறையீட்டினை தீர்த்தல் 16

நலனோம்பு சேவை 17

24 மணித்தியாலங்கள் முழுவதுமான தகவல் சேவையினை வழங்கள் 19

தாய் நாட்டுக்கு வருகை தந்தவர்களுக்கு உதவியளித்தல் 20

**இலங்கையருக்கு இலங்கைக்கு வெளியில் தொழில் வாய்ப்பு சந்தர்ப்பத்தினை முன்னேற்றுதல் மற்றும் நிர்மாணம் செய்தல்** 21

பயிற்சி 21

ஆட்சேர்த்தல் 23

தொழில் முன்னேற்ற வேலைத்திட்டம் 25

**வெளிநாட்டு வலைப்பின்னலின் செயற்பாட்டு நடவடிக்கை** 27

**நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்** 29

**திறத்தவர்களுடன் நடவடிக்கையில் செயற்படல்** 30

**இ.வெ.வே.பணியகத்தின் துணை நிறுவனங்கள்** 31

**நிதி மீளாய்வு**

**நிதிப்பகுப்பாய்வு** 32

**நிதிப்பிரகடனம்** 36

**கணக்காய்வதிபதியின் அறிக்கை** 99

**கணக்காய்வதிபதியின் அறிக்கை பற்றிய தலைவரின் அவதானிப்பு** 106

# விவரணம்

## எம்மைப்பற்றி....

இலங்கையில் வெளிநாட்டு தொழில் துறையில் கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்தும் ஒரே அதிகாரம் நாமாவோம்

**வெளிநாட்டு தொழில் மேம்படுத்தல் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் பற்றிய இராஜாங்க அமைச்சு**

இலக்கம் 2187/27 மற்றும் 2020.08.09 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் இ.வெ.வே.பணியகம் வெளிநாட்டு தொழில் முன்னேற்றம் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் பற்றிய இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படும்.

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**

1994 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் ஒதுக்கத்தின் கீழ் இ.வெ.வே.பணியகம் நிறுவப்பட்டது.

**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனம்**

இ.வெ.வே.வா.மு.நி. 1996 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன் அது இ.வெ.வே.பணியகத்தினால் பூரணமான உரிமையுடைய துணை நிறுவனமாகும்.

## இலக்கு

"அக்கரை சந்தைக்காக நிபுணத்துவத்துடன் கூடிய மனித வளத்தினை வழங்கும் உலகின் சிறந்த தெரிவாக இலங்கையினை உருவாக்குதல்"

## பிரதான நோக்கம்

- தொழிற்துறையினை ஒழுங்குபடுத்தல் மற்றும் வசதியளித்தல்
- இலங்கைக்கு வெளியில் சேவையில் உள்ளவர்களின் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனினை பாதுகாத்தல்
- இலங்கையருக்கு இலங்கைக்கு வெளியில் தொழில் வாய்ப்பினை முன்னேற்றுதல் மற்றும் நிர்மாணம் செய்தல்

## செயற்பணி

"தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்து மற்றும் தமது திறத்தவர்களின் நலனினை பாதுகாத்து, மக்களுக்கு தமது திறனுடன் அந்நிய நாட்டு சந்தையில் சிறந்த பலனினைப் பெறக்கூடிய வினைத்திறனான மற்றும் சமத்துவத்துடன் கூடிய வழியினை உருவாக்குதல்"


## தரம் பற்றிய கொள்கை

வாடிக்கையாளரின் திருப்திக்கு அப்பால் செயற்படுதல் தொடர்ச்சியான முன்னேற்றப்பட்ட பின்னணியில் வினைத்திறனான மற்றும் பயனுள்ள சேவையினை வழங்குவதனை உறுதி செய்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அர்ப்பணிப்பாயுள்ளது.

# தேசிய மற்றும் சர்வதேச வலைப்பின்னல்

## தலைமை அலுவலகத்தின் பிரிவு மற்றும் தலாஹேன அலுவலகம்: பிரிவுகள் 29

**தலைமை அலுவலகம்**: 234, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை.




**பிரதேச அலுவலகங்கள் : 06**

| | |
|---|---|
| அநுராதபுரம் | பதுளை |
| கண்டி | குருநாகலை |
| இரத்தினபுரி | வவுனியா |

**மாவட்ட மத்திய நிலையங்கள் : 08**

| | |
|---|---|
| அம்பாறை | யாழ்ப்பாணம் |
| மட்டக்களப்பு | பொலன்நறுவை |
| சிலாபம் | திருகோணமலை |
| தம்புள்ள | காலி |


**இடம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையங்கள் : 02**

மத்துகம
தங்காலை

**பயிற்சி மத்திய நிலையங்கள் : 02**

பன்னிப்பிட்டிய
குருநாகலை

**எமது அலுவலக ஆளணியினர்**
**1169**




**இலங்கை வெளிநாட்டு தூதுவராலயங்களில் தொழில் மற்றும் நலனோம்பு பிரிவுகள் : 16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அபுதாபி | பாரேன் | சைபிரஸ் | டுபாய் | இஸ்ரேல் | லெபனான் |
| மலேசியா | மாலைத்தீவு | ஓமான் | கட்டார் | ஜித்தா | ரியாத் |
| ஜோர்தான் | சிங்கப்பூர் | குவைட் | தென் கொரியா | | |

# 2020 ஆம் ஆண்டு சுருக்கமாக

53,875

ஆண்கள் : 32589
பெண்கள் : 21286

வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்தல்

ஐக்கிய அரபு எமிரேட், கட்டார், சவுதி அரேபியா

உழைப்பாளர்களினைப் பெற்றுக் கொள்ளும் பிரதான நாடுகள்

இல.ரூ.(மில்லியன்கள்)
1,317
அ.டொ.(மில்லியன்கள்)
7,103.9

வெளிநாட்டு பரிமாற்றல்கள்

ரூ.மி.
2,411

இ.வெ.வே. பணியகச் செலவுகள்

| | |
|---|---|
| தொழில் ரீதியாக | : 2954 |
| மத்திய மட்டம் | : 1498 |
| நிபுணத்துவத்துடன் | : 16733 |
| எழுதர்களுடன் கூடிய | : 2493 |
| அரை நிபுணத்துவம் | : 749 |
| குறைந்த நிபுணத்துவத்துடன் கூடிய வீட்டுப் பணியாளர்கள் | : 14061 |
| அரை நிபுணத்துவம் | : 15387 |

மொத்த பதிவுகள் (மனிதவள மட்டங்கள்)

ரூ.மி.
1,781

இ.வெ.வே. பணியக வருமானம்

ரூ.மி.
895.23

ஊழியர் நலனோம்பு நிதிச் செலவுகள்



# பொது முகாமையாளரின் பணிவிடை

2020 ஆம் ஆண்டு கொவிட்-19 தொற்று காரணமாக மிகவும் சவாலான வருடமானதுடன் ஒட்டு மொத்தமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வருடம் முழுவதும் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்தது. கொவிட்-19 உலகளாவிய தொற்று மனிதர்களின் சுகாதார நெருக்கடிக்கு உட்பட்டு இடம்பெயர் சுழற்சி முறைக்கு அதிக தாக்கத்தினை விளைவித்தது. அடிப்படையில் இந்த நிலைமையின் தாக்கம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதான வருமானத்தினை வெளித்தள்ளியது. தொற்று காரணமாக இடம்பெயர் ஊழியர்கள் மற்றும் இடம்பெயர் வட்டத்தின் ஏனைய பிரிவுகளினதும் விளைவுகள் பாரியளவிலானவை.

கைத்தொழிலில் தோல்வியினை தடுத்துக் கொள்வதற்காக மற்றும் நிறுவனத்திற்கு நிகழும் நிதி இழப்பினை தடுத்துக் கொள்வதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு திடீர் அவதானம் தேவையான பிரிவுகளினை அடையாளம் கண்டு அதன் ஒழுங்குவிதிகளினை மீள் கட்டமைத்து தமது செயற்பணியினை திட்டமிடுவதற்கு வேண்டியேற்பட்டது.

2020 ஆம் ஆண்டில் தொற்று காரணமாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் வருமானம் விசாலமான அளவு குறைவடைந்ததுடன் அது 2019 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 4,218 மில்லியன்களுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் எமது வருமானம் 1781 மில்லியன் ரூபாய்களாக கருத்திற் கொள்ளக் கூடிய விதம் தாக்கத்தினை ஏற்படுத்தியது. 2020 ஆம் ஆண்டில் வெளிநாட்டு சேவைகள் அந்நிய செலாவணி 1,317 மில்லியன் ரூபாய்களானதுடன் அது 2019 ஆம் ஆண்டில் 6,717 டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் 7,103 மில்லியன்கள் வரையிலான அதிகரிப்பு அறிக்கையிடப்பட்டது. வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை 53,875 ஆகும்.

இந்த உலகளாவிய தொற்று நிலைமையினுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நோக்கத்தினை கைப்பற்றிக் கொள்வதற்காக அதிகமான உற்பத்தித் திறனுடன் பங்களிப்பாற்றிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கமல் ரத்தவத்த அவர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவின் வழிகாட்டலினையும் நினைவு கூறுகின்றேன். தொழிலாளர் இராஜாங்க அமைச்சர் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் பற்றிய இராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் அலுவலர்களின் வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களுக்காக நான் எப்பொழுதும் நன்றியுடையவனாவேன். இந்தக் காலத்தினுள் எமது அலுவலக ஆளணியினரின் அதிகமான கடின உழைப்பு மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை இராஜாங்க தூதுவர் குழுக்களின் பங்களிப்பினையும் இங்கு மதிக்கப்பட்டு பாராட்டத்தக்கது.

ஏனைய அனைத்து திறத்தவர்கள் மற்றும் வேறு நாடுகளில் உள்ள இலங்கை பிரஜைகள் இந்த கடுமையான சந்தர்ப்பத்தினுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு அநேகமாக பாராட்டத்தக்கது.

இவ்வாறான அனைத்து சவால்கள் இருந்தாலும், நாம் எமது திறமையான மனித வளத்துடன் எமது இலக்கினை பூர்த்தி செய்வதற்கு எழுந்துள்ளதுடன் சர்வதேச சந்தையில் புதிய போக்குடன் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

**மேஜர் ஜெனரால் (இளைப்பாறிய) மஹிந்த ஹதுருசிங்க,**
பொது முகாமையாளர்

## பணிப்பாளர் சபை

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தின் 5 வது பிரிவின் பிரகாரம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதுடன் பணிப்பாளர் சபை கீழ் குறிப்பிடப்பட்டவர்களினால் உள்ளடங்கியது.

நிதி அமைச்சு - 01 பிரதிநிதி
வெளிநாட்டு அலுவலர்கள் அமைச்சு - 01 பிரதிநிதி
மகளிர் அலுவல்கள் அமைச்சு - 01 பிரதிநிதி
அதிகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் - 04 பிரதிநிதிகள்
வெளிநாட்டு வேலைவாய்ப்பு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்பட்ட– 04 பிரதிநிதிகள் என்றவாறாகும்.

## 2020.01.16 ஆந் திகதி தொடக்கம் 2020.12.31 ஆந் திகதி வரை பணிப்பாளர் சபை

| | | |
|---|---|---|
| 1. | திரு. கமல்நீல் சேனக ரத்வத்த | தலைவர் |
| 2. | திரு. நிமல் பியரத்ன திப்பொட்டுமுனுவ | பணிப்பாளர் |
| 3. | செல்வி. K.D.R. ஒல்கா | பணிப்பாளர் |
| 4. | திருமதி. A. ஸ்ரீயாணி | பணிப்பாளர் |
| 5. | திருமதி. K.M.S.D. ஜயசேகர | பணிப்பாளர் |
| 6. | திரு. A.G.M.V. விஸ்வநாத் | பணிப்பாளர் |
| 7. | திரு. ஆனந்த குணதிலக | பணிப்பாளர் |
| 8. | திரு. G.M.L. சம்பத் | பணிப்பாளர் |
| 9. | திரு. அப்துல் ராசிக் மொஹமட் கவுஸ் | பணிப்பாளர் |
| 10. | திரு. புத்தி பிரதீப் நியதடுபொல | பணிப்பாளர் |
| 11. | திரு. W.ஷிரோமன் ஹேமந்த சபுமொஹொட்டி | பணிப்பாளர் |
| 12. | திரு. மாதரன்கே லங்கா விஜித குமார | பணிப்பாளர் |

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு



## கொவிட்- 19 தொற்றுக்கு பதிலளித்தல்

கொவிட் -19 தொற்று மற்றும் இலங்கை குடிபெயர் ஊழியர்களுக்கு அங்கு நிகழும் தாக்கத்திற்கு பதிலளித்தலுக்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குடிபெயர் ஊழியர்களுக்காக தேசிய கொவிட்-19 திட்டத்தினை தயாரித்துள்ளது.

இது நிருவப்பட்டுள்ளது புலம்பெயர் ஊழியர்களுக்காக சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) என்பவற்றின் ஒத்துழைப்புடன் ஆகும். இலங்கை வெளிநாட்டுச் சேவைப் பணியகத்தின் தலைவர் 2020 ஆம் ஆண்டு ஏப்பிறல் 30 ந் திகதியில் இ.வெ.சே.பணியகத்தின் அங்கத்தவர்கள், புலம்பெயர் ஊழியர்களுக்காக சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) இனால் உருவாக்கப்பட்ட செயற்பாட்டு குழுவினை நிறுவியுள்ளது. இந்த திட்டத்தினை தயாரித்தலில் சிவில் அமைப்பு, தொழில் வல்லுநர்களின் சங்கம், அதிகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியாளர்களின் அங்கத்துவ நிறுவனம் (ALFEA) என்பவற்றிற்கான கூட்டத்தின் யோசனை மற்றும் சிபாரிசு கருத்திற் கொள்ளப்பட்டது. இந்த செயற்பாட்டின் மூலம் அனைத்து திறத்தவர்களினதும் யோசனை, அதாவது அரச அலுவலர்கள், புலம்பெயர் விசேடவியலாளர்கள், ALFEA மற்றும் சர்வதேச அமைப்புக்கள் எனும் திறத்தவர்களின் யோசனை மற்றும் சிபாரிசினை உரிய விதம் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கீழ் குறிப்பிடப்படும் கட்டங்கள் ஐந்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறை வழிகள் பற்றி இந்த திட்டத்தில் கருத்திற் கொள்ளப்படும்.

1. புலம்பெயர் நாட்டினுள் (country of destination) மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைவழிகள்
2. இலங்கைக்கு மீண்டும் வருகை தரும் பொழுது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்
3. உட்புகும் சந்தர்ப்பத்தில் மற்றும் வருகை தந்ததன் பின்னர் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள்
4. மீண்டும் புலம்பெயருமிடத்து மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள்.

மேற்குறிப்பிடப்பட்ட வழிமுறைகளுக்காக உள்ள நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவ்வவ் திறத்தவரின் பொறுப்பிற்கு இணங்க சிபாரிசு செய்யப்பட்ட வழிமுறைகள் உடனடியாக, குறுகிய காலம், மத்திய காலம் மற்றும் நீண்டகாலம் என்ற ரீதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்று நிலைமையின் முதல் அரைகாலப்பகுதியில், கொவிட் 19 காரணமாக சிரமத்திற்கு முகங்கொடுத்த புலம்பெயர் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய தகவல்களினை தேசிய ரீதியாக 24 மணித்தியாலங்கள் முழுவதும் செயற்படும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 24 மணித்தியால தகவல் மத்திய நிலையம் மற்றும் வெளிநாட்டில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை தூதுவராலயத்தின் தூதுவர் குழுவினால் திரட்டுவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கையினை மேற்கொண்டது.

பாதிக்கப்பட்டவர்களினை அடையாளம் காண்பதற்கு, அதன் சிக்கல்களினை தவிர்த்துக் கொள்வதற்கு மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு விரைவாக நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்காக இ.வெ.வே.பணியகம் இந்த நடவடிக்கையினை ஆரம்பித்தது.

இந்த உலகளாவிய தொற்று சம்பந்தமாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார வழிகாட்டலினை பிரசுரிப்பதற்கும், வெகுஜன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் அரசாங்கத்தின் ஆலோசனைகளை புலம் பெயர் ஊழியர்களிடையே அறிவிக்கும் பொருட்டு விரிவான வேலைத்திட்டத்தினை ஊக்குவிப்பதற்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கையினை மேற்கொண்டது.

இதற்கு மேலதிகமாக குறுங்கால எல்லையினுள் இ.வெ.வே.பணியகம் தமது செயற்பாட்டு வழிமுறைகளுக்கு இணங்க பயணித்து, இ.வெ.வே.பணியகத்தின் செலவினை நிறுத்துவதற்காக வெளிநாட்டில் இருக்கும் இலங்கை தூதுவர் சபைகளில் அலுவலக ஆளணியினரின் நடவடிக்கைகளினை குறைப்பதற்கு தீர்மானித்தது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அலுவலக ஆளணியினருக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் நாளாந்த வேலைநடவடிக்கைகளில் சுகாதார வழிகாட்டல்கள் கடைப்பிடிக்கப்பட்டது.

புலம்பெயர் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களினை கருத்திற் கொண்டு, புறப்படுவதற்கு முன்பதாக, தொழிலில் மற்றும் வருகை தந்த பின்னர் புலம் பெயர் ஊழியர்களுக்கு சேவையினை வழங்குவதற்காக தனது சட்டம்/ செயற்பாட்டு முறைகளினை தயாரிப்பதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கையினை மேற்கொண்டது. இந்த நிலைமையினுள், வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்பதாக பெண்கள் ஊழியர்களுக்காக கட்டாயம் குடும்ப பின்னணி அறிக்கையில்(FBR ) செல்லுபடியாகும் காலம் உடனடி கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு கைத்தொழிலில் கொவிட்- 19 தொற்றின் சவால் மற்றும் தாக்கத்திற்கு முகங்கொடுத்துள்ளதுடன் தேசிய ரீதியாக மட்டுமன்றி பயணித்துள்ள புலம்பெயர் ஊழியர்களின் மற்றும் அவர்களின் குடும்பங்களின் சிக்கல்களினை தீர்ப்பதற்கு இ.வெ.வே.பணியகம் நடவடிக்கையினை மேற்கொண்டது. மனிதாபிமான அடிப்படை காரணத்தின் பேரில் வெளிநாட்டு ஊழியர்களுக்காக தேவையான நிவாரணங்களினை வழங்குவதற்காக வெளிநாட்டு தூதுவராலயங்களில் தொழில் மற்றும் நலனோம்பு பிரிவுகள் 16 இற்கு 50000/- ரூபாய்கள் விகிதம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் கோரிக்கைகளினை கருத்திற் கொண்டு அந்த தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் ஊழியர்களின் தேவையின் பிரகாரம் தூதுவர் குழு இந்த உலகளாவிய தொற்று நிலைமையினுள் எமது மக்களினை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட நாட்டினுள் உள்ள இலங்கை மக்கள் மற்றும் இ.வெ.வே.பணியகத்துடன் இணைந்து நடவடிக்கையினை மேற்கொண்ட நன்கொடையாளர்களின் பங்களிப்பினை மதிக்கின்றது.

இதற்கு மேலதிகமாக, உணவு மற்றும் அத்தியாவசிய தேவையினை வழங்குவதற்கு சிரமத்திற்கு உள்ளான புலம்பெயர் ஊழியர்களுக்காக 5000/- பெறுமதியான உலர் உணவு பைக்கற்றுகளினை வழங்குமாறு இலங்கை தூதுவர் சபையின் தொழில் மற்றும் நலனோம்பு பிரிவுகள் 16 இற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டு அதிக சவாலான ஆண்டானதுடன் கொவிட்-19 தொற்று காரணமாக தனது வருமானம் கருத்திற் கொள்ளக்கூடிய அளவு குறைவினை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் அனுபவிக்க நேர்ந்தது. இ.வெ.வே.பணியகம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கைத்தொழிலில் பிரதான ஒழுங்கு முறை மற்றும் சட்டமாக்கப்பட்ட நிறுவனம் ஆயினும், அதன் திறத்தவர்களினால் பிரதானமாக புலம்பெயர் ஊழியர்கள் முகங்கொடுக்கும் சிக்கல்கள் பற்றிய நெருங்கிய அவதானத்துடன் இருப்பதுடன், மீளாய்வு வருடத்தினுள் அந்த நிலைமையினை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.









# செயற்திறன்

## வெளிநாட்டு தொழில் கைத்தொழிலினை முறைமைப்படுத்தி வசதி களினை வழங்கல்

### அனுமதிப்பத்திரம் வழங்கல்

இ.வெ.வே.பணியகச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அதன் தேவையினை பூர்த்தி செய்தவர்களுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு வியாபார நடவடிக்கைகளுக்கு இ.வெ.வே.பணியகம் அனுமதிப்பத்திரத்தினை வழங்கும். அனுமதிப்பத்திரம் ஒரு வருட காலம் வரை செல்லுபடியாகும் என்பதுடன் அதனை புதுப்பிக்க இயலும்.

புதிய அனுமதிப்பத்திரம்: 46

புதுப்பித்தல்: 635

இரத்துச் செய்தல்: 38



அனுமதிப்பத்திரம் வழங்கல் பிரிவின் மூலம் அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு தொழில் பிரதிநிதி நிறுவனத்திற்காக (LFEA) ஆட்சேர்த்தல், மனக்குறைகளினை கையாளல், மீண்டும் வரவழைத்தல் மற்றும் வெளிநாட்டு தொழில் வியாபாரங்களின் வேறு நடவடிக்கைகள் மற்றும் இணைந்த சட்ட ஒழுங்குவிதிகள், தரம் மற்றும் நடைமுறை வழிகள் ஆகியன பற்றி விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படும்.

நாட்டில் நிலவும் தொற்று நிலைமை காரணமாக அனுமதிப்பத்திர பிரிவு வருடத்திற்கு நிகழ்த்துவதற்கு உரிய நடவடிக்கைகளினை நிகழ்த்துவதில் சிரமத்திற்கு முகங்கொடுத்தது.

அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதிநிதித்துவ நிறுவனங்கள் அதிகம் உள்ள பிரதேசங்களில் விதிக்கப்பட்டிருந்த நடமாடும் எல்லை காரணமாக அதன் பிரிவின் சேவை குறைவடைந்தமை காரணமாக அதன் செயற்திறனுக்கு தாக்கம் ஏற்பட்டுள்ளது.







## தொழிற் கட்டளையினை அனுமதித்தல் மற்றும் தொழிலினை பதிவு செய்தல் நடவடிக்கை

மேற்படி நடவடிக்கைகள் இரண்டு நடைமுறைப்படுத்துவது செயற்பாட்டு பிரிவுகள் இரண்டின் மூலமாகும்.

- முதல் அனுமதியினை வழங்கும் பிரிவு
- இறுதி அனுமதியினை வழங்கும் பிரிவு


முதல் அனுமதியினை வழங்கும் பிரிவு அனுமதிப்பத்திரம் பெறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதிநிதித்துவ நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் தொழில் கட்டளைகள் மற்றும் அறிவித்தலுக்காக அனுமதியினை வழங்கும். அது தனியார் மூலத்தின் மூலம் தொழில் பெறும் புலம் பெயர் ஊழியர்கள் பதிவு மற்றும் பதிவினை புதுப்பித்தலுக்காக வசதிகள் வழங்குகின்றது. (சுய- பதிவு செய்தல்)





இறுதி அனுமதியினை வழங்கும் பிரிவு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் அனுமதிக்கப்பட்ட தொழில் கட்டளைக்கு இணங்க வெளிநாட்டு வேலைக்காக இலங்கையினரினை ஆட்சேர்க்கும் அனுமதிப்பத்திரம் உரித்தாளரான வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதிநிதித்துவ நிறுவனத் திற்காக (LFEA) அனுமதி வழங்கும்.


## 2020 ஆம் ஆண்டில் LFEA ஊடாக இலங்கையர்களினை வெளிநாட்டு வேலைவாய்ப் பிற்காக பதிவு செய்தல்




COVID-19 தொற்று நிலைமையின் தாக்கத்துடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், LFEAs ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான பதிவுகளில் விசாலமான கீழ் குறிப்பிடப்படும் வீழ்ச்சி அதாவது, 2019 இல் 71095 மற்றும் 2018 இல் 67817 ம் ஆன பதிவானது 2020 ஆம் ஆண்டில் 19385 ஆக வீழ்ச்சியடைந்தமை கீழ் காணப்படும் விதம் காணக்கிடைக்கின்றது. இது உலகளவில் தொற்றுநோய் காரணமாக தேசிய ரீதியாக மற்றும் பயணிக்கும் நாடுகளில் விதிக்கப்பட்டிருந்த நடமாடும் எல்லை காரணமாக வெளிநாட்டு தொழிலுக்காக வெளிச் செல்லும் புலம் பெயர் ஊழியர்களுக்கு தடை விதித்தமையினால் 2020 ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதன் எண்ணிக்கை பூச்சியமாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## LFEA ஊடாக பதிவு செய்தல் : 2018 - 2020




இ.வெ.வே.வா.பணியகச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம், இலங்கைக்கு வெளியில் தொழிலுக்காக வெளிச்செல்லும் ஒவ்வொரு இலங்கையருக்கும் அவ்வாறு வெளிச் செல்வதற்கு முன்பதாக இ.வெ.வே.பணியகத்தில் பதிவு செய்தல் வேண்டும். இ.வெ.வே. பணியகத்தில் பதிவு செய்வதன் மூலம் இலங்கையர் வெளிநாட்டில் புலம் பெயர்ந்த நாடுகளில் அவர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளினை பாதுகாக்கும் செல்லுபடியாகும் ஒப்பந்தத்துடன் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக உறுதிப்படுத்தும். செல்லுபடியாகும் தொழில் ஒப்பந்தத்துடன் இலங்கையர் வெளிநாட்டில் பதிவு செய்துள்ள அனைத்து புலம் பெயர் ஊழியர்கள் இ.வெ.வே.பணியகத்தின் மூலம் இலவசமாக வழங்கப்படும் காப்புறுதி பாதுகாப்பிற்காக தகைமை பெறுவதுடன் அது அவர்களின் ஒப்பந்த காலத்தினுள் செல்லுபடியாகும். இ.வெ.வே.பணியகத்தில் பதிவிற்குரிய தொழில் ஒப்பந்தத்திற்கு இணங்க இரண்டு வருடங்கள் அல்லது மூன்று வருடங்களுக்காக செல்லுபடியாகும். ஊழியர்கள் தமது பதிவினை இ.வெ.வே.பணியகத்தின் தலைமை அலுவலகம், கிளை அலுவலகம் மற்றும் வெளிநாட்டில் அமைந்துள்ள இலங்கை அரச தூதுவராலயம் ஊடாக புதுப்பித்துக் கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது.

# சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

சட்ட விரோத நடவடிக்கைகள், மோசடி, நபர்கள் வியாபாரத்தினை இல்லாதொழித்தல் மற்றும் இலங்கையில் வெளிநாட்டு தொழில் கைத்தொழிலில் ஈடுபடும் செயற்பாட்டாளரின் சிறந்த நடத்தையினை முன்னேற்றுவ தற்காக அனைத்து முயற்சிகளிலும் இ.வெ.வே.பணியகம் நடவடிக்கைகளினை மேற்கொள்ளும். இந்த செயற்பாட்டினுள், இ.வெ.வேபணியகம் தொழில் தேடுபவர்களின், புலம்பெயர் ஊழியர்களின், அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் மற்றும் ஏனைய மன உளைச்சலுக்கு உட்பட்ட திறத்தவர்களின் உரிமைகள் மற்றும் அபிலாசைகளினை பாதுகாப்பதற்காக பல்வேறுபட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தும் உபாயத்தினை நடைமுறைப்படுத்துகின்றது.

அனுமதிப்பத்திரம் பெற்றவர்களான வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் வேறு அனுமதிப்பத்திரம் அற்ற திறத்தவர்களினால் நிகழ்த்தப்படும் சட்டவிரோத ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் பற்றி பெறப்படும் பொது மக்கள் முறையீடுகள் சம்பந்தமாக இ.வெ.வே.பணியகம் பரிசீலனையினை மேற்கொள்ளும். சந்தேக நபர்களினை கைது செய்வதற்காக சுற்றிவளைப்பினை மேற்கொள்வதுடன் உரிய பரிசீலனையினை நடாத்தியதன் பின்னர் சட்டத்தினை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைக்காக விசேட விசாரணைப் பிரிவு, சட்டப்பிரிவு என்பன இ.வெ. வே.பணியகத்தின் மனித வியாபார அலகு நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

| விசேட விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகள் | 2019 | 2020 |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி நிறுவனத்திற்கு எதிராக பொது மக்களிடமிருந்து கிடைக்கும் முறையீடுகளினை விசாரணை செய்தல் | 1762 | 749 |
| தீர்க்கப்பட்ட முறையீடுகளின் எண்ணிக்கை (மொத்தம்) | 3406 | 803 |
| செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி வெளிநாட்டு துறையில் ஈடுபட்டிருக்கும் நபர்களிடம் இருந்து கிடைக்கும் முறையீடுகளினை விசாரணை செய்தல் | 779 | 394 |
| தீர்க்கப்பட்ட முறையீடுகளின் எண்ணிக்கை | 248 | 199 |
| ஆட்கடத்தல் வியாபாரம் மற்றும் கொள்ளையினை தடுப்பதற்காக சட்டரீதியற்ற முறையில் ஆட்சேர்த்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் சுற்றிவளைப்பு | 298 | 173 |
| வெற்றிகரமான சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | 252 | 173 |





அக்கரையின் உழைப்பிற்கு சட்டத்தின் கைக்கோர்ப்பு" என்னும் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக உரிய சட்டம், ஒழுங்குவிதிகள் மற்றும் பயன்பாடு பற்றிய அறிவினை விரிவுபடுத்துவதனை போலவே வினைத்திறன் மற்றும் உற்பத்தி திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான நிபுணத்துவத்தினை முன்னேற்றுவதற்காக இ.வெ.வே.பணியகத்தின் அலுவலக ஆளணியினர் மற்றும் அரசாங்கப் பிரிவின் அலுவலர்களினை விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டமாகும்.

| **வழக்கு தொடுப்பதனால் அறவிடப்பட்ட தண்டப்பணம், அதில் 75% இனை விதித்து இ.வெ.வே. பணியகத்தின் நலனோம்பு நிதிக்கு மாற்றம் செய்தல்** | | |
|---|---|---|
| | **2019** | **2020** |
| வழக்குத் தொடுப்பதனால் அறவிடப்பட்ட | 13,456,770/- | 2,622,000/- |
| விதிக்கப்பட்ட தண்டப்பணம் | 3,424,500/- | 2,550,000/- |
| இ.வெ.வே.பணியகத்திற்கு கிடைக்கப்பெற்ற (75%) | 1,888,375/- | 1,912,750/- |
| கொரியாவில் தப்பியோடியோர் சம்பந்தமான வழக்கினை இணக்கத்திற்கு உட்படுத்தி அறவிடப்பட்ட | 2,900,000/- | 3,129,032.50 |

அரசாங்க அலுவலர்கள், பொது மக்கள், அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதிநிறுவனம் மற்றும் ஏனைய திறத்தவர்களுக்காக மனித வியாபாரம் பற்றிய சட்டம் மற்றும் ஆட் கடத்தலுக்கு எதிரான வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டத்தினை இ.வெ.வே.பணியகம் நடாத்தியது.





# வியாபார பிணக்கினை இணக்கத்திற்கு உட்படுத்தல்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு கைத்தொழிலில் திறத்தவர்களுக்கு இடையில் சிறந்த நடத்தையினை முன்னேற்றும் கட்டமாக, உரிய திறத்தவர்களுக்கு இடையில், அதாவது அனுமதிப்பத்திரம் உரித்துடைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் இரண்டு அல்லது அதற்கு அதிகமான எண்ணிக்கைக்கு இடையில் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள்) அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக சேர்த்துக் கொள்ளப்படும் நிறுவனம் மற்றும் அனுமதிப்பத்திரம் பெற்ற முகவர் நிலையம் அல்லது அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் அல்லது புலம்பெயர் ஊழியர் அல்லது தொழிலினை எதிர்ப்பார்த்திருப்பவர்க்கு இடையில் ஏற்படுத்தப்படும் வியாபார பிணக்கினை தீர்ப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தலையீடு செய்யும்.

## இலங்கைக்கு வெளியில் கடமையாற்றும் ஊழியர்களின் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பினை பாதுகாத்தல்

### முறையீட்டினை தீர்த்தல்


புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் அவர்களுக்காக கிடைக்கப் பெறும் முறையீட்டினை தீர்த்தலினை முன்னேற்றுவதற்கு இ.வெ.வே.பணியகத்தின் வெப்தள முறையீட்டு முகாமைத்துவ முறைமை (CMS ) பேணப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் ஊழியருக்கு அல்லது அவர்/அவளுக்காக தோற்றுபவர்களுக்கு இ.வெ.வே.பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் அல்லது பிரதேச அலுவலகத்திற்கு அல்லது அவ்வவ் நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களில் தொழிலாளர் பிரிவிற்கு அவர்/அவர் அல்லது அவர்களுக்கு பதிலாக முறையீட்டினை சமர்ப்பிக்க இயலும்.

வெப்தள முறையீட்டு முகாமைத்துவ முறைமை மற்றும் அது தொடர்பான தொடர்படுவதற்கு மற்றும் அறிக்கையினை குறித்துக் கொள்வதற்கு அவ்வவ் நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களில் சிக்கல்களினைத் தீர்க்கும் அலுவலர்களுக்கு, உரிய அதிகாரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு இ.வெ.வே.பணியகம் வசதிகளினை வழங்கும்.

நட்டஈடு மற்றும் வேறு குறைப்பணங் களினை செலுத்துதல் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற முறையீடுகள் 31 சம்பந்தமாக மனஉளைச்சலுக்கு உட்பட்ட புலம்பெயர்ந்தவர்களுக்காக ரூ.2,370, 612 இனை அறவிட்டு மனஉளைச்சலுக்கு உட்பட்டவர்களுக்கு உதவியளிப்பதற்கு 2020 ஆம் ஆண்டினுள் இ.வெ.வே. பணியகத்திற்கு இயலுமாகியது.

## 2019 மற்றும் 2020 ஆம் வருடங்களில் முறையீடுகள் பற்றிய அறிக்கை





## நலனோம்பு சேவைகள்

எமது நிறுவனம் புலம்பெயர்ந்த ஊழியர்களின் மற்றும் அவர்களின் அங்கத்தவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு செய்யக்கூடிய அனைத்து முயற்சிகளினையும் செயன்முறைப் படுத்தும். இந்த சூழலினுள் நாம் புலம்பெயர் ஊழியர்களின், அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் பொருளாதார நிலையான தன்மை மற்றும் அவர்களின் பிள்ளைகளின் கல்வியினை இலக்காகக் கொண்டு பல்வேறு சேவைகளினை நடைமுறைப்படுத்துகின்றோம். திடீர் சந்தர்ப்பங்களில் ஒத்துழைப்பு வழங்கல், வைத்திய வசதிகளினை வழங்கல், அங்கவீன புலம்பெயர் ஊழியர்களுக்கு உதவியளித்தல் போன்ற சேவைகளினை வழங்குகின்றோம்.

**நலனோம்பு செயற்பாடுகள்**

- புலம்பெயர்ந்த ஊழியர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் வைத்திய வசதிகள்
- அங்கவீன புலம்பெயர் ஊழியர்களுக்காக வீடுகள்
- வைத்திய முகாம்கள்
- புலம்பெயர்ந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்காக பாடசாலை உபகரணங்கள்
- புலம்பெயர்ந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கான விசேட உதவிகள்
- புலம்பெயர் ஊழியர்களுக்கான புலமைப்பரிசில்கள்
- காப்புறுதி நலன்கள்
- திடீர் சந்தர்ப்பங்களில் மற்றும் ஆபத்துக்களில்
- புலம்பெயர்ந்த ஊழியர்களின் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கான விசேட உதவி
- பிள்ளைபாதுகாப்பு வேலைத்திட்டங்களினை நடாத்துதல்

புலம்பெயர்ந்த ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் நலனினைக் கருத்திற் கொண்டு இ.வெ.வே.பணியகத்தினால் ஊழியர் நலனோம்பு நிதியம் (WWF) அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியம் இ.வெ.வே.பணியகம் மற்றும் வெளிநாடுகளில் நிறுவப்பட்டுள்ள இலங்கை தூதுவராலயங்களினால் வழங்கப்படும் நலனோம்பு சேவைகள்/ வசதிகளினை வழங்குவதற்கு பயன்படுத்தப்படும்.




| ஊ.நல.நி.வருமானங்கள் (ரூ.மில்) | 2020 | 2019 |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு கட்டணங்கள்- முகவர் நிறுவனங்களில் | 28 | 104 |
| ஆட்சேர்ப்பு கட்டணம்- தனிநபர்களிடமிருந்து | 28 | 101 |
| கொரியாவிற்கு ஆட்சேர்த்தல்- மேம்படுத்தல் கட்டணம் | 47 | 120 |
| கொரியாவிற்கு ஆட்சேர்த்தல் – பயிற்சிக் கட்டணங்கள் | 25 | 68 |
| பயிற்சி வருமானங்கள் | 42 | 149 |
| வெளிநாட்டு தூதுவராலயங்களில் இருந்து பெற்ற வருமானங்கள் | 249 | 996 |
| வேறு செயற்பாட்டு வருமானங்கள் | 0.4 | 116 |












| ஊ.ந.நி. செலவுகள் (ரூ.மில்) | 2020 | 2019 |
|---|---|---|
| நலனோம்பு செயற்பாடுகள் | 204 | 481 |
| அலுவலக ஆளணியினர் செலவுகள் (தூதுவராலயங்களின் தூதுவர் குழு உட்பட) | 421 | 645 |
| நிறுவனச் செலவுகள் (தூதுவராலயங்கள் உள்ளடங்கலாக) | 209 | 287 |
| வேறு செயற்பாடுகள் (தூதுவராலயங்கள் உள்ளடங்கலாக) | 55 | 72 |
| நிதி (தூதுவராலயங்கள் உள்ளடங்கலாக) | 5 | 4 |
| வியாபார விளம்பரம் / பிரச்சாரம் (தூதுவராலயங்கள் உள்ளடங்கலாக) | 0.5 | 1 |
| வியாபார மேம்படுத்தல்கள் (தூதுவராலயங்கள் உள்ளடங்கலாக) | 0.73 | 1 |




## 24 மணித்தியால தகவல் சேவைகள்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு சம்பந்தமாக எந்தவொரு நபருக்கும் தகவல்களினை வழங்கல் மற்றும் புலம்பெயர்ந்தவர்களின் மற்றும் அவர்களுக்காக மேற்கொள்ளப்படும் முறையீடுகளினை பெற்றுக் கொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் 24 மணித்தியால தகவல் சேவை நடைமுறைப்படுத்தப்படும். எந்தவொரு நபருக்கும் 1989 என்னும் விசேட தொலைபேசி இலக்கம் ஊடாக அல்லது அதற்காக செயற்படுத்தப்படும் 011-2879900 இலக்கம் மூலம் அல்லது infor_center@slbfe.lk என்னும் மின்னஞ்சல் முகவரி மூலம் அல்லது ஸ்கைப் மூலம் 24 மணித்தியாலங்கள் முழுவதும் இ.வெ.வே. பணியகத்தின் தகவல் மத்திய நிலையத்துடன் தொடர்பு கொள்ள இயலும்.

| 2020 ஆம் வருடத்தினுள் இ.வெ.வே.பணியகத்தின் தகவல் மத்திய நிலையம் | |
|---|---|
| தொலைபேசி விசாரணைகள் | 160,571 |
| ஈ-மெயில் விசாரணைகள் | 3,986 |





## தாய்நாட்டிற்கு மீண்டும் வருகை தருபவர்களுக்கான உதவி

2008 ஆம் ஆண்டு தேசிய தொழிலாளர் புலம்பெயர் கொள்கையினை அறிமுகப்படுத்துவதன் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு கைத்தொழிலுக்கு புதிய பெறுமதியினை சேர்த்து புலம்பெயர்ந்த ஊழியர்கள் மீண்டும் வருகை தரல் மற்றும் மீண்டும் சமூகமயப்படுத்தல் பற்றிய உப கொள்கை மற்றும் தேசிய செயற்பாட்டு திட்டம் 2015 ஆம் ஆண்டில் வலுவுக்கு கொண்டு வரப்பட்டது.

அதற்கிணங்க, வெளிநாட்டில் கடமையில் இருந்து மீண்டும் தாய் நாட்டிற்கு வருகை தந்ததன் பின்னர் புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கு பாதுகாப்பு மற்றும் கௌரவமாக மீண்டும் வருகை தந்து சமூகமயமாக்குவ தற்காக உதவியளித்தலுக்காக விசேட பிரிவு இ.வெ. வே.வா.பணியகத்தினால் நிறுவப்பட்டுள்ளது.

புலம்பெயர் ஊழியர்களுக்கு அவர்களின் சமூக மற்றும் பொருளாதார ரீதியாக மீண்டும் தொடர்ப்பு கொள்வதற்காக உதவியளித்தல், அவர்களின் திறமையினை உயர்த்துதல், மீண்டும் கடமையில் ஈடுபடுத்தல் மற்றும் மீண்டும் உழைப்பு படைக்கு உட்புகுத்துதல் விடய தலைப்புடன், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மீண்டும் இணைதல் பிரிவு வருடம் முழுவதும் செயற்பாடுகள் பலவற்றை மேற்கொள்ளும்.

| செயற்பாடுகள் | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | தெரிவு செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சுயத் தொழில் மற்றும் தேவையான உதவியினை வழங்குதல் சம்பந்தமாக புலம்பெயர் ஊழியர்களினை அடையாளம் காண்பதற்கு விழிப்புணர்வூட்டல் வேலைத் திட்டங்கள் மற்றும் 27 துறைகளில் சுற்றுலாவினை நடாத்துதல் | 12 | 250 |
| **செயற்பாடுகள்** | **பயனாளிகளின் எண்ணிக்கை** | **தொகை** |
| மீண்டும் வருகைதரும் புலம்பெயர் ஊழியர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணம் | 28 | ரூ. 138,667.45 |







# இலங்கையர்களுக்கு தீவுக்கு வெளியில் தொழில் சந்தர்ப்பங்களினை உருவாக்குதல் மற்றும் அதிகரித்தல்

## பயிற்சியினை வழங்கல்





தொழில் எதிர்ப்பார்ப்பாளர்களுக்கு வெளிநாட்டு தொழிற் சந்தையில் தொழிலினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவியளிப் பதற்காக இ.வெ.வே.பணியகத்தின் பயிற்சி மத்திய நிலையங்கள் இரண்டு மூலம் தொழில் எதிர்ப்பார்ப்பாளர்களுக்கு வெளியில் செல்வதற்கு முன்னர் தேவையான பயிற்சியினை வழங்கும்.

**பயிற்சி பிரிவு (தேசிய பிரிவு)** தேசிய பிரிவில் வீட்டுச் சேவைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள் வழங்குபவர்களாக தேசிய நிபுணத்துவ தகைமைகள் - III (NVQ - III) இனைப் பெற்றுக் கொள்வதனை இலகுப்படுத்தும் பொருட்டு தொழில் எதிர்ப் பார்ப்பவர்களுக்கு தேவையான பயிற்சியினை வழங்கும்.

**பயிற்சி பிரிவு (தேசிய அல்லாத பிரிவு)** அரை நிபுணத்துவம் மற்றும் குறைந்த திறன் தேவையில் தொழிலினை எதிர்ப்பார்ப்ப வர்களுக்கு வெளியே செல்வதற்கு முன்னர் தேவையான பயிற்சியினை வழங்கும்.

இந்த பயிற்சி வேலைத்திட்டம் தொழிலினை எதிர்ப்பார்ப்பவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கும், வெற்றிகரமாக அந்த தொழிலில் ஈடுபட்டு தனது குடும்பத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதற்கும் பெறுமதியினை சேர்க்கும் மூலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

**2020 ஆம் வருடத்தில் தேசிய அல்லாத பயிற்சி பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள்**

| செயற்பாடுகள் | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆண்/ பெண் தொழில் எதிர்ப்பார்ப்பவர்களுக்கு வெளியே செல்வதற்கு முன்னர் உரிய தொழில் பற்றிய அடிப்படையினை அறிமுகப்படுத்தும் பயிற்சி. | 319 | 5498 |
| பயிற்சி ஆலோசனையாளர்களுக்கு பயிற்சியாளர்களினை பயிற்றுவிக்கும் (TOT) வேலைத்திட்டத்தினை நடாத்துதல். | 02 | 91 |
| கொரியா தொழில் எதிர்ப்பார்ப்பவர்களுக்கு சிறந்த உடல் நலன் தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வெளியே செல்வதற்கு முன்னர் பயிற்சி வேலைத்திட்டத்தினை நடாத்துதல் | 56 | 2237 |
| ஜப்பான் தொழில் எதிர்ப்பார்ப்பவர்களுக்கு சிறந்த உடல் நலன் தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு வெளியே செல்வதற்கு முன்னர் பயிற்சி வேலைத்திட்டத்தினை நடாத்துதல் (TITP) | 15 | 118 |
| பயிற்சியினை நடாத்துதல் | 216 | 3938 |





| 2020 ஆம் வருடத்தில் தேசிய பயிற்சி பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகள் | | |
|---|---|---|
| **பயிற்சி வேலைத்திட்டங்கள்** | **நடாத்தப்பட்ட வகுப்புக்களின் எண்ணிக்கை** | **பயிற்சியாளர்களின் எண்ணிக்கை** |
| தேசிய உதவி வீட்டுச் சேவை- மத்திய கிழக்கு பிரிவு : 21 நாட்கள்\| NVQ மட்டம்- III | 80 | 1235 |
| தேசிய உதவி வீட்டுச் சேவை- ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசியா: 21 நாட்கள் \| NVQ மட்டம்- III | 16 | 220 |
| பராமரிப்பு சேவை 45 : நாட்கள் \| NVQ மட்டம்- III | 24 | 442 |
| பராமரிப்பு சேவை : 07 நாட்கள் | 05 | 11 |
| எழுத்தறிவு பயிற்சி வேலைத்திட்டங்கள் – சிங்களம் மற்றும் தமிழ் மொழி \| 18 நாட்கள் | 08 | 102 |
| IFE பயிற்சி வேலைத்திட்டங்கள் : 07 நாட்கள் | 40 | 368 |







# ஆட்சேர்த்தல்


இலங்கையர் கொரியா வேலைக்காக தொழில் அனுமதிப்பத்திர முறைமையின் **(EPS)** கீழ் ஆட்சேர்ப்பதற்கு இ.வெ.வே.பணியகம் வசதிகள் வழங்கும். இந்த திட்டம் இலங்கை மற்றும் தென் கொரியாவிற்கு இடையில் ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு (**MOU**) இணங்க நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த திட்டம் கொரியா மனித வள அபிவிருத்தி பிரிவுடன் (HRD) ஒருங்கிணைவுடன் நடைமுறைப் படுத்தப்படும் நோக்கத்துடன் இ.வெ.வே.பணியகத்தில் ஆட்சேர்த்தல் பிரிவு 2017 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சேர்த்தல் பிரிவு (கொரியா) ஆக பெயரிடப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் முறைமையின் **(EPS)** கீழ் மிகவும் வினைத்திறனாக ஆட்சேர்ப்பு வேலைத்திட்டத்தினை நிகழ்த்தும் பொருட்டு ஆட்சேர்த்தல் பிரிவு (கொரியா) மூலம் கீழ் குறிப்பிடப்படும் செயற்பாடுகள் நிகழ்த்தப்படும்.

- கொரியா மொழி நிபுணத்துவம் பரிசீலனை (புள்ளிகள் வழங்கப்படும் பரீட்சை முறைமை/Normal EPS-TOPIK & Special EPS-TOPIK)
- தெரிவு செய்யப்பட்ட தொழில் தேடுபவர்களுக்கு வெளியில் செல்வதற்கு முன்பதாக அவசியமான பயிற்சி
- தொழில் (சேவை) ஒப்பந்தத்தினை வழங்கல்
- வெளியே செல்வதற்கு முன்பதாக வங்கி கடன் பெற்றுக் கொள்வதற்கு உதவியளித்தல்
- வெளியே செல்வதற்கு தேவையான நடவடிக்கையினை வழங்கல்
- கொரியா இளைப்பாற்றினை பெற்றுக் கொள்வதற்கு உதவியளித்தல் (இந்நாட்டுக்கு மீண்டும் வருவதற்கு)
- "மகிழ்ச்சிகரமான தாய் நாட்டுக்கு வருகைத்தரல்" வேலைத்திட்டம்

## 2018 – 2020 ஆம் வருடத்தினுள் தென் கொரியாவினை நோக்கி புறப்படல்




கடந்த வருடமான 2019: 3580 மற்றும் 2018: 3419 உடன் ஒப்பிடுமிடத்து கொவிட் -19 தொற்று காரணமாக அனைத்து குழுக்களிலும் வெளிநாட்டுக்குச் செல்லல் 2020 ஆம் வருடத்தில் 500 வரை குறைவடைந்துள்ளது.






**இலங்கை இளைஞர்களினை ஜப்பானிற்கு சேர்த்துக் கொள்ளல்**

ஜப்பான் **IM** மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைப்பு மற்றும் இ.வெ.வே.பணியகத்திற்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆம் வருடத்தில் தொழில்நுட்ப உள்ளக பயிற்சி வேலைத்திட்டங்கள் **(TITP)** ஆரம்பிக்கப்பட்டது.

ஜப்பானுக்கு புறப்பட்டுச் செல்லல்– **2020: 58**








# தொழில் முன்னேற்ற வேலைத்திட்டம்

இலங்கையருக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களினை முன்னேற்றுவதற்கு இ.வெ.வே.பணியகம் தேசிய மற்றும் வெளிநாட்டு ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்களினை நடைமுறைப்படுத்தும். தேசிய முன்னேற்ற வேலைத்திட்டங்கள் மூலம் தொழிலினை எதிர்ப்பார்த்திருப்பவர்களுக்கு தொழில் ரீதியான வழிகாட்டலினை வழங்கும்.


இ.வெ.வே.பணியகத்தின் பிரதேச மத்திய நிலையங்கள், அரசாங்க மற்றும் அரசாங்கம் அல்லாத அமைப்புக்கள் மற்றும் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களின் தொழிலாளர் பிரிவு என்பவற்றினை ஒருங்கிணைத்து பல்வேறு நடமாடும் சேவைகள், தொழில் சந்தை மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத் திட்டங்களினை நடைமுறைப்படுத்தும்.

இலங்கை வானொலிச் சேவை மூலம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒலிபரப்பப்படும் வானொலி நிகழ்ச்சியான "புலம்பெயர் நவோதய" பொது மக்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சம்பந்தமாக அறிந்து கொள்ளல் மற்றும் புலம்பெயர் ஊழியர்களுக்கு கிடைக்கும் வெற்றிகரமான நிகழ்வுகளினை ஒலிபரப்புவதற்கு 2020 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய முன்னேற்ற வேலைத்திட்டமாகும்.




இ.வெ.வே.பணியகத்தின் நிகழ்நிலை தொழில் வங்கி மூலம் தொழிலினை எதிர்ப்பார்ப்பவர்களுக்கு தொழிலுக்காக பதிவு செய்வதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களினை தேடிக்கொள்வதற்கும் வசதிகளினை அளிக்கும். அவ்வாறே அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு (நிறுவனங்களுக்கு) அதில் நிலவும் வெற்றிடங்களுக்காக பொருத்தமான விண்ணப்பதாரர்களினை தேடிக்கொள்வதற்கும் வசதிகள் வழங்கும்.




அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களில் ***(LFEAs)*** உள்ள அனுமதிக்கப்பட்ட வெற்றிடங்களினை இ.வெ.வே.பணியகம் (www.slbfe.lk) பிரசுரிப்பதுடன், தொழிலினை எதிர்ப்பார்ப்பவர்களுக்கு அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு தற்பொழுது நிலவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றி தெரிந்து கொள்வதன் மூலம் இலகுப்படுத்தும். அதன் வெப் தளம் மூலம் ஒவ்வொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் தகவல்கள், நிலவும் வெற்றிடங்கள், அனுமதிக்கப்பட்ட குறைந்தளவு சம்பளம், தேவையான தகைமைகள் மற்றும் அனுமதிக்கப் பட்ட ஆட்சேர்ப்புக் கட்டணம் பற்றி தொழில் எதிர்ப்பார்ப்பவர்களினைப் போலவே எந்தவொரு நபர்களுக்கும் பார்த்து அறிந்து கொள்ள இயலும்.

***ஆம் வருடத்தில் இ.வெ.வே.பணியகம் ISO 9001:2008 தரச் சான்றிதழினைப் பெற்றுக் கொண்டதுடன், ISO 9001:2015 தர முகாமைத்துவ முறை மேம்படுத்தப் பட்டுள்ளது.***

## வெளிநாட்டு வலைப்பின்னல்களின் செயற்பாட்டு நடவடிக்கைகள்

### வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களில் தொழில் மற்றும் நலனோம்பு பிரிவு




அபுதாபி. பாரெயின், சைபிரஸ், டுபாய், இஸ்ரேல்,ஜோர்தான், ஜெடா, குவைட், லெபனான், மலேசியா, மாலைத்தீவு, ஓமான், கட்டார், ரியாத், தென்கொரியா மற்றும் சிங்கப்பூர் உள்ளடங்களாக 14 நாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களில் தொழில் மற்றும் நலனோம்பு பிரிவுகள் 16 அமைக்கப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட பிரிவுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இ.வெ.வே.பணியகத்தின் வெளிநாட்டு நிருவாகம் மற்றும் வெளிநாட்டு ஒருங்கிணைப்பு பிரிவுக்கு உரிய இராஜதந்திர நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக நிகழ்த்தப்படுவதுடன், அதன் மூலம் புலம்பெயர் ஊழியர்களுக்கு சேவைகளினை வழங்கும்.


### இந்தப் பிரிவுகளின் மூலம் நிகழ்த்தப்படும் செயற்பாடுகளாவன;

- தொழில் மற்றும் நலனோம்பு பிரிவுகளில் இராஜதந்திர அலுவலர்களினை சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் அலுவலக ஆளணியினருக்கு உதவி வழங்கல்.
- வெளிநாடுகளுக்கு ஆட்சேர்க்கும் மற்றும் அதனுடன் இணைந்த சட்ட ஒழுங்குகளினை நடைமுறைப்படுத்தல்.
- உழைப்பினை பெற்றுக் கொள்ளும் நாடுகளுடன் இருத்திறத்தார்/ புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஒப்ப மிடுவதற்கு வசதிகளினை வழங்கல்.
- தேசிய மற்றும் வெளிநாட்டு ரீதியாக மாநாடுகள், கலந்துரையாடல்கள்/ கருத்தரங்குகள்/ பயிற்சி பட்டறை களினை ஒருங்கிணைத்தல்
- நாளாந்த சட்டத்திற்கு வெளியிலான நடவடிக்கைகளினை மேற்கொள்ளும் இலங்கையரினை வெளியேற்றுதல்.
- புலம்பெயர்ந்த ஊழியர்களின் இறப்பின் போது தேவையான உதவிகளினை வழங்கல்
- புலம்பெயர்ந்த ஊழியர்களினை கைது செய்வதற்கு, சிறையில் அடைப்பதற்கு, பொலிஸ் காவலில் வைப்பதற்கு தேவையான உதவியினை வழங்கல்.
- இலங்கை வெளிநாட்டு தூதுவராலயங்களில் பாதுகாப்பு இல்லங்களினை பேணுதல்.
- வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் பிரதிநிதிகளினை வரவேற்றல் மற்றும் வெளிநாடுகளுக்கு பிரதி நிதிகளினை அனுப்புதல்.
- இ.வெவே.பணியகத்தின் புலம் பெயர் ஊழியர்களினை பதிவு செய்தல்/ பதிவு செய்தலினை விரிவுபடுத்தும் நடைமுறைகளினை ஒழுங்குப்படுத்துதல்.

இ.வெ.வே.பணியகம் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களில் சிபாரிசின் பிரகாரம் தேவையான புலம்பெயர் ஊழியர்களுக்கு தாய்நாட்டுக்கு வருகை தருவதற்கு தேவையான விமானக் கட்டணங்கள் செலுத்துதல் நிகழ்த்தப்படும்.

| பு.சே.இற்காக செலுத்திய விமானக் கட்டணம் பற்றிய விபரங்கள் | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|
| | நபர்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | நபர்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) | நபர்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மில்) |
| காப்புறுதியின் கீழ் | 18 | 0.67 | 21 | 0.8 | 16 | 0.86 |
| ஊ.ந.நிதியத்தின் கீழ் | 7 | 0.30 | 19 | 1.29 | 8 | 0.38 |

## 2018 - 2020 : புலம்பெயர் ஊழியர்களுக்கு விமானக் கட்டணங்களினை செலுத்துவதற்காக தாங்கிக் கொள்ளப்பட்ட செலவு




வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மற்றும் உரிய இலங்கை தூதுவராலயங்களுடனான தொடர்புடன் இறப்பெய்திய புலம்பெயர் ஊழியர்களின் இறந்த உடலினை இந்நாட்டுக்கு கொண்டு வருவதற்கு இ.வெ.சே. பணியகம் இறந்த புலம்பெயர்ந்த ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு உதவி வழங்கும். அவ்வாறான இறப்பின் போது காப்புறுதியினைப் பெற்றுத் தரும் சாவீட்டு நிவாரணத்திற்கு மேலதிகமாக புலம்பெயர் ஊழியர்களின் இறுதிச்சடங்கு நடவடிக்கைகளுக்கு ரூ.30,000 தொகையினை இ.வெ.வே.பணியகம் வழங்கும்.

| விபரம் | 2020 | |
|---|---|---|
| | மனித வளங்களின் எண்ணிக்கை | செலவு (ரூ.மி.) |
| ஊ.ந.நிதியத்தின் கீழ் இறந்த உடலினை அகற்றுவதற்கு | 7 | 1.43 |
| சாவீட்டுச் செலவு | 114 | 2.4 |

அபுதாபி. டுபாய், ஜெடா, ஜோர்தான், குவைட், லெபனான், மலேசியா, ஓமான், கட்டார், ரியாத் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு தூதுவராலயங்களில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்களின் தொடர்புடன் இ.வெ.வே.பணியகம் பாதுகாப்பு இல்லங்களினை பேணும். வருடத்தினுள் பெண் ஊழியர்கள் 1344 பேர்களுக்கு மேற்படி பாதுகாப்பு இல்லங்களில் வதிவிட வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாதுகாப்பு இல்லங்களில் வதிவிடதாரிகளுக்கு இ.வெ.வே.பணியகம் உணவு, வைத்திய வசதிகள், விமானக் கட்டணங்கள் செலவு, போக்குவரத்து வசதிகள், நாளாந்த உதவி மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள்/ உதவிகளினை வழங்கியுள்ளது.

துன்பத்திற்கு ஆளான ஊழியர்கள் மற்றும் மேற்படி பாதுகாப்பு இல்லங்களினை பேணுவதற்கு செலவிடப்பட்ட மொத்த செலவு இ.வெ.வே.பணியகத்தில் ஊழியர் நலனோம்பு நிதியத்தின் (ஊ.ந.நி) கீழ் தாங்கிக் கொள்ளப் பட்டது. 2020 ஆம் வருடத்தில் (ஜனவரி தொடக்கம் அக்டோபர் வரை) பாதுகாப்பு இல்லங்களினை பேணுவதற்கு இ.வெ.வே.பணியகத்தினால் செலவிடப்பட்ட மொத்தச் செலவு 19.69 மில்லியன் ரூபாய்களாகும்.

**வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர்ந்த ஊழியர்களினை கைது செய்வதற்கு, சிறைக்காவலிற்கு, பொலிஸ் காவலிற்கு மற்றும் வைத்தியசாலையில் அனுமதிப் பதற்கு உதவி வழங்கல்**

| வருடம் | சிறை | பொலிஸ் | வைத்தியசாலை |
|---|---|---|---|
| 2018 | 167 | 12 | 104 |
| 2019 | 60 | 4 | 99 |
| 2020 | 81 | 3 | 94 |

## இலங்கை தூதுவராலயங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறையீடு

| வருடம் | கிடைக்கப் பெற்ற முறையீடுகளின் எண்ணிக்கை | இணக்கம் செய்யப்பட்ட |
|---|---|---|
| 2018 | 283 | 273 |
| 2019 | 161 | 175 (முடிவுறுத்தப்பட்ட) |
| 2020 | 160 | 113 |

# நிருவாகம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்

உடன்படிக்கைக்கு உட்பட்ட புலம்பெயர்ந்த ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் நலனோம்பு பற்றிய பொறுப்பினை வகிக்கும் ஒரே அரசாங்க நிறுவனமாக சிறந்த நிருவாகம் மற்றும் பொறுப்பு ஆகிய கொள்கை சட்டத்தின் கீழ் அதன் திறத்தவர்களுக்கு வினைத்திறனான, உற்பத்தித்திறனான சேவையினை வழங்கும் அடிப்படை நோக்கத்துடன் இ.வெ.வே.பணியகம் அதில் உள்ள மனித மற்றும் ஏனைய வளங்களினையும், தகவல் தொழில்நுட்பத்தினையும், உற்பத்தித்திறனான விதம் செயற்படுத்தி முகாமைத்துவ நடவடிக்கையில் ஈடுபடுகின்றது.


இ.வெ.வே.பணியகத்தின் தலைமை அலுவலகம், வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங் களில் உள்ள தொழிலாளர் பிரிவுகள் உள்ளடங்கலாக தேசிய மற்றும் வெளிநாட்டு அலுவலகங்கள், தேசிய வெளிநாட்டு தொழில் முகவர் நிலையங்கள் மற்றும் வெளிநாடுகளில் ஆட்சேர்த்தல் மேற்கொள்ளும் நிறுவனங்களுடன் சிறந்ததாக தொடர்புபடும் விரிவான வீச்சில் பரந்துள்ள வலைப்பின்னல் (The wide area network -WAN) நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் வினைத்திறனினை அதிகரிக்கும்.

இ.வெ.வே.பணியகத்தின் பதவி வெப்தளம் (www.slbfe.lk) வெளிநாடுகளில் செயற்படுவதுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் பற்றிய பல்வேறு தகவல்களினை வழங்கும் மூலமாக உள்ளது.

## திறத்தவர்களுடன் நடவடிக்கையில் ஈடுபடல்

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தமது திறத்தவர்களுடன் சிறந்த விதம் நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் நிறுவனத்தின் இலக்கிற்கு நெருங்கும் பொழுது நிகழ்த்தப்படும் நடவடிக்கையினை சிறந்ததாக மேற்கொள்வதற்கு பங்களிப்பு செய்கின்றது.**

இ.வெ.வே.பணியகத்தின் திறத்தவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் ஆலோசனைகளினை விசாரிக்கும் முறைமையினை உற்பத்தித்திறனான உபாய வழியில் அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கும். சார்புநிலையின் முக்கிய தேவை அல்லது பாதகம் பற்றிய தகவல்களினை திறத்தவர்கள் சமர்ப்பிக்க இயலும்.




## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணைந்த நிறுவனம் இலங்கை வெளிநாட்டு முகவர் நிறுவனம் (இ.வெ.மு.நி)


1996 இல் இலங்கை வெளிநாட்டு முகவர் நிறுவனம் (இ.வெ.வே.மு.நி) அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பூரண இணைந்த நிறுவனமாக நிறுவப்பட்டது. இ.வெ.மு.நி. பதிவு அலுவலகம் நாவல, நாராஹேன்பிட்டி வீதி, இல.12 இல் அமைந்துள்ளது. இங்கு பிரதான கடமையாவது தொழில் எதிர்ப்பார்த்திருப்பவர்களுக்கு பயிற்றுவித்தல் மூலம் அவர்களின் நிபுணத்துவத்தினை அதிகரித்தல் மற்றும் வெளிநாட்டு வேலைக்காக இலங்கையினரினை ஆட்சேர்த்தல் ஆகும். தொழில் எதிர்ப்பார்ப்போர் மற்றும் வெளிநாட்டு தொழில்தருநர் தொடர்ப்புபடுத்தும் அரசாங்க ஆட்சேர்த்தல் நபராக இ.வெ.மு.நி. கடமையாற்றும்.

## 2020 - 2018 ஆம் வருடங்களின் வருமானம் மற்றும் செலவு - ரூ.மில்

| | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|
| வருமானம் | 18 | 22 | 36 |
| செலவு | 25 | 25 | 30 |




## 2018 - 2020 ஆம் வருடங்களில் இ.வெ.வே.மு.நிறுவனத்தின் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு வெளியேறுதல்.



# நிதி


## நிதிப்பகுப்பாய்வு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனைத்து தேசிய மற்றும் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கும் நோக்கத்துடன் நிதியினை சேகரித்தல், நிறுவனத்தினுள் நிதி முகாமைத்துவம், நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாடு, நிறுவனத்தினுள் நிதி முகாமைத்துவம், நிறுவனத்தின் நிதிக் கட்டுப்பாட்டு உபாய முறைக்கு இணங்கியதாக உற்பத்தித்திறனாக நிதியினை பயன்படுத்தல் இ.வெ.வே. பணியகத்தின் நிதிப் பிரிவின் பொறுப்பாகும்.

### எமது குழுவின், இ.வெ.வே.பணியகம் மற்றும் இ.வெ.வே.மு. நிலையம் வருமானம் 2020 - 2018 (ரூ.மில்)

| | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|
| **குழுவின்** | | | |
| வருமானம் | 1,799 | 4,241 | 4,507 |
| வரிக்கு முன்னரான வருமானம் | -638 | 1,046 | 1,532 |
| வரிக்கு பின்னரான வருமானம் | -744 | 756 | 1,171 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 2,166 | 2,309 | 2,714 |
| நடைமுறை சொத்துக்கள் | 14,563 | 14,679 | 14,047 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 1,867 | 1,765 | 1,893 |
| **இ.வெ.வே.பணியகம்** | | | |
| வருமானம் | 1,781 | 4,218 | 4,471 |
| வரிக்கு முன்னரான வருமானம் | -631 | 1,049 | 1,525 |
| வரிக்கு பின்னரான வருமானம் | -737 | 759 | 1,166 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 2,088 | 2,244 | 2,648 |
| நடைமுறை சொத்துக்கள் | 14,441 | 14,554 | 13,898 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 1,817 | 1,715 | 1,820 |
| **இ.வெ.வே.மு.நிறுவனம்** | | | |
| வருமானம் | 18 | 22 | 36 |
| வரிக்கு முன்னரான வருமானம் | -7 | -3 | 6 |
| வரிக்கு பின்னரான வருமானம் | -7 | -3 | 4 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 78 | 124 | 73 |
| நடைமுறை சொத்துக்கள் | 123 | 72 | 149 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 49 | 51 | 75 |


## எமது குழுவின், இ.வெ.வே. பணியகம் மற்றும் இ.வெ.வே.மு. நிறுவனம் 2020 - 2019




## இ.வெ.வே.பணியகத்தின் பிரதான வருமானம்


| | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|
| ஆட்சேர்த்தல் கட்டணம் - முகவர் நிறுவனம் | 83 | 311 | 300 |
| ஆட்சேர்த்தல் கட்டணம் - நபர் | 276 | 1018 | 1151 |
| கொரியா ஆட்சேர்த்தல் மேம்படுத்தல் கட்டணம் | 48 | 120 | 103 |
| வசதிகள் மற்றும் கட்டணம் | 11 | 41 | 42 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 42 | 62 | 52 |
| செஸ் வருமானம் | 55 | 198 | 194 |
| கொரியா நிருவாகக் கட்டணம் | 5 | 14 | 12 |
| கொரியா மீள உட்பிரவேசக் கட்டணம் | 7 | 14 | 16 |
| பயிற்சி வருமானம் | 25 | 68 | 33 |
| வெளிநாட்டு தூதுவராலயங்களில் இருந்தான வருமானம் | 274 | 1080 | 1172 |
| நிதி வருமானம் | 765 | 994 | 890 |

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதான வருமானம் - ரூ.மில்




## இ.வெ.வே.பணியகத்தின் செயற்பாட்டு செலவுகள் - 2020

ரூ.மில்



# எமது வங்கியாளர்கள்












# நிதிப்பிரகடனம்

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்**
**ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கான குறிப்புக்கள்**
**2020 டிசம்பர் 31 ந் திகதி முடிவுற்ற வருடத்திற்காக**

| | குறிப்பு | குழு 2020 ரூ. | குழு 2019 ரூ. | இ.வெ.வே.வா.பணியகம் 2020 ரூ. | இ.வெ.வே.வா.பணியகம் 2019 ரூ. |
|---|---|---|---|---|---|
| வருமானம் | 4 | 876,485,748 | 3,087,494,421 | 868,962,553 | 3,075,269,084 |
| ஏனைய வருமானம் | 5 | 148,219,968 | 149,179,964 | 146,145,874 | 149,366,715 |
| | | **1,024,705,716** | **3,236,674,385** | **1,015,108,427** | **3,224,635,799** |
| **செலவு** | | | | | |
| அலுவலக ஆளணியினர் செலவு | 6 | 1,482,421,649 | 1,759,589,064 | 1,467,494,641 | 1,743,826,083 |
| தாபனச் செலவு | 6 | 395,050,377 | 529,559,467 | 391,063,027 | 525,133,978 |
| செயற்பாட்டுச் செலவு | 6 | 304,649,948 | 332,113,975 | 298,846,378 | 326,911,573 |
| நிதிச் செலவு | 6 | 33,806,973 | 9,571,659 | 33,725,912 | 9,455,315 |
| விளம்பரம் மற்றும் பிரச்சாரம் | 6 | 6,920,736 | 13,814,795 | 6,869,123 | 13,681,253 |
| வியாபார மேந்தலைச் செலவு | 6 | 9,401,832 | 68,794,935 | 9,172,186 | 68,785,489 |
| நலனோம்பு நிதி மற்றும் வேறு செலவு | 6 | 204,269,330 | 481,486,840 | 204,269,330 | 481,486,840 |
| | | **2,436,520,844** | **3,194,930,735** | **2,411,440,597** | **3,169,280,531** |
| நிதி வருமானம் | 7 | 774,130,758 | 1,004,890,788 | 765,577,719 | 994,294,952 |
| | | **774,130,758** | **1,004,890,788** | **765,577,719** | **994,294,952** |
| | | | - | | |
| வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) | | **(637,684,370)** | **1,046,634,438** | **(630,754,450)** | **1,049,650,220** |
| | | | - | | |
